*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
ISSN: 2456-5148 (Online)
www.ngmtamil.in

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p541-547** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# பொன்னீலன் படைப்புகளில் நெய்தல் நிலத்தாவரங்கள்

Neithal Land Flora in the Works of Ponneelan

**திருமதி சு.வினோதா,**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 05.*
**Mrs. S. Vinotha*,**
*Assistant Professor, Department of Tamil, Sona College of Arts and Science, Salem - 05*
*Email: srimegha775@gmail.com, Tel: 8098224646.*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 27-08-2026
**Published: 28-08-2026**
*Corresponding Author
Email:
*sangeetha@sigc.edu*

**Abstract:** All the literary creators structure their works with nature as the central theme. It is customary for writers born in lands of bountiful nature to highlight the environmental state of their homeland, reminding both the public and the government of their duty to protect it. Among such creators the works of writer Ponneelan, who vividly portrayed Kumari district - a land that stands as the very kingdom of nature - are truly unique. The lifestyle of the people of kumara district is in noway inferior to the life of ancient Tamils who structured their ways of living based on the five geographical landscapes. In particular, Ponneelan has brilliantly identified and highlighted the Maritime (Neithal) lifestyle of that region and the profound ecological wisdom of its people through his literary works.

**Keywords:** *Maritime Region, Alexandrian Laurel Fruit, Cashew Nut, Screw Pine, Beach Morning Glory.*

**ஆய்வுச்சுருக்கம்**

இயற்கையைப் பாடுபொருளாகக் கொள்ளாமல் எந்தவொரு படைப்பாளரும் இருக்க முடியாது. அந்த வகையில் இயற்கை எழில் கொஞ்சும் மண்ணில் பிறந்த படைப்பாளர்கள் தங்களது தாய்நிலத்தின் சூழலைச் சுட்டிக்காட்டி அதனை மக்களும் அரசும் பாதுகாக்க வேண்டியதன் கடமையை உணர்த்துவது வழக்கம். அத்தகு படைப்பாளர்களுள் இயற்கையின் பூமியாகத் திகழும் குமரி மாவட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதிய எழுத்தாளர் பொன்னீலன் அவர்களின் படைப்புகள் தனித்துவமானவை. ஐவகை நிலங்களின் அடிப்படையில் தங்களது வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்ட பண்டைத்தமிழர்களின் வாழ்வியலுக்குச் சற்றும் சளைக்காதது குமரி மாவட்ட மக்களின் வாழ்வு. குறிப்பாக அந்நிலப்பகுதியின் நெய்தல் சார்ந்த வாழ்வியலையும் மக்களின் சுற்றுச்சூழல் சார்ந்த அறிவையும் பொன்னீலன் அவர்கள் தன் படைப்பகளின் வழியே மிகச் சிறப்பாக அடையாளப்படுத்தியுள்ளார்.

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

**குறிப்புச்சொற்கள்:** நெய்தல் நிலம், புன்னைக்காய், முந்திரி, தாழை, அடும்புக்கொடி

**முன்னுரை**

உயிரினங்கள் உயிர் வாழத் தேவையான அனைத்தையும் இயற்கை உருவாக்கி வைத்துள்ளது. மண், நீர், காற்று, தட்பவெப்பம், போன்ற இயற்கைத் தன்மைகளில் மாற்றம் ஏற்பட்டாலும் மனிதன் அதற்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்கின்றான். மழை, காடு, வயல், கடல், வறண்ட பூமி என பூமி புவியியல் அடிப்படையில் பல வகைப்பட்டிருந்தாலும் அதற்குத் தகுந்த வாழ்வியல் முறைக்கு பழகிக் கொள்கின்றான். எனவே இயற்கை மாறுபாடுகளுக்கு ஏற்ப அவனது பண்பாட்டுச் சூழல்களும் குண நலன்களும் பேச்சு நிலைகளும் கூட மாறுபடுகின்றன. சூழலியல் அடிப்படையில் மாறுபாடு அடையும் மனித வாழ்வியல் இலக்கியப் படைப்புகளின் பேசு பொருளாகி ஆய்வுக் கோட்பாடுகளால் ஆராயப்படுகின்றன. தமிழகத்தின் குமரி மாவட்டம் ஐந்து வகையான இயற்கைச் சூழல்களைத் தன்னகத்தை கொண்டுள்ளன. அவ் ஐவகைச் சூழல்களைப் பொன்னீலன் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார். அவற்றுள் நெய்தல் நிலச்சூழலை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**சுற்றுச்சூழலியல் - விளக்கம்**

பழங்காலத்தில் மனிதன் இயற்கையை அறிவியலாகப் பாராமல் வாழ்வியலாகக் கொண்டு வாழ்ந்துள்ளான். **“குறிப்பிட்ட இடத்தில் காலத்தில் காணப்படும் சுற்றுப்புற நிலைமைகளின் கூட்டே சுற்றுச்சூழல்” (நா.கருணாநிதி, சுற்றுச்சூழல் கல்வி, ப.1)**

**“தாய்மொழி என்பது சுற்றுச்சூழலில் இருந்து தோற்றம் கொள்வதால் மக்களின் பண்பாட்டில் அங்குள்ள மலைகள் காடுகள் ஆறுகள் கடல் போன்றவை ஒன்றோடு ஒன்று பிணைந்து இருக்கும் அத்துடன் அவர்கள் பேசும் மொழி அதன் இயற்கையை அதன் வளத்தை அவர்களுக்கு நினைவுறுத்திகொண்டே இருக்கும்.” (நா.கருணாநிதி, சுற்றுச்சூழல் கல்வி, ப.1)** என்ற நக்கீரனின் கூற்று இயற்கை மனிதப்பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கத்தை உணர்த்துகிறது. *“If the culture of a people is indigenous to the soil on which they live if it appears to have grown in C2 before they came in contact with other people it must be solely due to the influence of their physical surrounding your culture that has grown as the reaction of a people to their will you is due to geographical and not historical causes be the influence like the influence of foreign people who have come in touch with them by conquest or pray or other forms of peaceful intercourse” (P.T.SrinivasIyengar M.A History of the Tamilsfrom the earliest times to 600 A.D, P.1)* என்று ஸ்ரீனிவாச அய்யங்கார் மனித பண்பாடு புவியியல் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது என்கின்றார்.

**குமரி மாவட்டத்தின் நெய்தல் நிலம்**

நெய்தல் நிலம் என்பது கடல் மற்றும் கடல் சார்ந்த நிலப்பகுதியைக் குறிக்கும். தொல்காப்பியர் நெய்தல் நிலத்தை **“வருணன் மேய பெருமணல் உலகமும்”** (தொல்காப்பியம், அகத்திணையியல்,

நூ.5) என்று வருணனை வழிபடும் மணல் நிறைந்த கடல் பகுதியாக அடையாளப்படுத்துகின்றார். பிங்கலந்தையரும் **“அருங்கடல் நெய்தல் நிலப்பெயராகும்” (பிங்கல நிகண்டு, நூ.136) என்று பிங்கலந்தையார்,** நெய்தல் நிலப்பெயராக அருங்கடலைச் சுட்டுகின்றார். இவ்வாறு நெய்தல் நிலமானது கடல் மற்றும் கடல் சார்ந்த பகுதிகளை அடையாளமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் நெய்தல் நிலப்பகுதிகளுள் முக்கடல்கள் சங்கமமாகும் குமரி மாவட்டம் தனிச்சிறப்புடையது. குமரி மாவட்ட நெங்தல் நிலச் சூழலைப் பொன்னீலன் தனது மறுபக்கம் புதினத்திலும் தேடல் புதினத்திலும் பதிவு செய்துள்ளார்.

**குமரி மாவட்டக் கடல்கள் மற்றும் கடற்புற ஊர்கள்**

குமரி மாவட்டம் அரபிக்கடல், வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் என்னும் மூன்று கடல்கள் சங்கமமாகும் இடத்தில் அமைந்துள்ளது. எனவே இங்குப் பல கடற்கரை கிராமங்கள் உள்ளன.

- முட்டம்
- கடியப்பட்டினம்
- தேங்காய்ப்பட்டினம்
- பெருந்துறை
- விளாத்துறை
- பெரிய காட்டுத்துறை
- ஈத்தாமொழி
- காயல் கரை

ஆகிய ஊர்கள் கடலோர ஊர்களாகப் பொன்னீலன் தனது படைப்புகளில் குறிப்பிட்டுள்ளார்.
தலைமுறையாக நகர்த்திச் செல்கிறது.

**நெய்தல் நிலத்தாவரங்கள்**

குமரி மாவட்டத்தின் நெய்தல் நில நிலப்பரப்பில் வளரக்கூடிய தாவரங்களுள் தாழை, முந்திரி, புன்னை, ஈஞ்சை ஆகியவை பொன்னீலனின் படைப்புகளில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**புன்னைக்காயும் விளக்கெண்ணெயும்**

‘புன்னைக்காய்’ என்பது பொதுவாக விளக்கெண்ணெய் தயாரிப்பதற்குப் பயன்படும் ஒரு முதன்மையான நெய்தல் நிலத் தாவரப் பொருளாகும். மின்சார வசதி இல்லாத பழங்காலத்தில், மக்கள் எண்ணெய்களால் நிரப்பப்பட்ட விளக்குகளையே வெளிச்சத்திற்காகப் பயன்படுத்தினர்.

அக்காலத்தில் விளக்கு எரிப்பதற்குப் புன்னைக்காயிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயே பெரும்பான்மையாகப் பயன்பட்டுள்ளது.

**"புன்னை நறுநெய் புகையும்" (சிறுபாணாற்றுப்படை, பா.அ.148)** என்று காய்ந்த புன்னைக்காயிலிருந்து எடுக்கப்பட்ட நெய் (எண்ணெய்) ஊற்றி ஏற்றப்பட்ட விளக்கிலிருந்து வெளிப்படும் நறுமணப் புகை குறித்துச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. இவ்வாறு விளக்கிற்கு ஊற்றிப் பயன்படுத்தப்பட்டதால், இது பொதுவழக்கில் 'விளக்கெண்ணெய்' என்று அழைக்கப்பட்டது (இது தற்கால ஆமணக்கு விளக்கெண்ணெயில் இருந்து மாறுபட்டது).

புன்னைக்காய் எண்ணெயை ஊற்றி விளக்கு எரிப்பதால் அதிலிருந்து வெளிவரும் வெளிச்சம் கண்களுக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்துவதோடு, கண் சார்ந்த நோய்களிலிருந்தும் கண்களைப் பாதுகாக்கின்றது. இத்தகைய மருத்துவ குணம் கொண்ட புன்னை எண்ணெய், தோல் நோய்களுக்கான மருந்து தயாரிப்பிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

குமரி மாவட்ட மக்கள் மத்தியில் புன்னை விதைகள் 'பரல்கள்' என்று அழைக்கப்படுகின்றன. வெளிச்சம் தருவதற்குப் பயன்பட்டதால் இவ்விடத்து மக்கள் இதனை 'வெளிச்செண்ணெய்' என்றும், புன்னைக்காயிலிருந்து எடுக்கப்பட்டதால் 'புன்னைக்காய் எண்ணெய்' என்றும் அழைத்தனர். இதனை, **"மேடை அருகே நின்ற பெரிய வெளிச்செண்ணெய் விளக்கில் இருந்து மஞ்சள் ஒளி அவர்களின் பரட்டைத் தலைகள் மீது அசைந்து கொண்டிருந்தது." (பொன்னீலன், மறுபக்கம், ப.131)** என்றும் **"மாடக்குழியில் புன்னைகாய் எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சம் சுற்றி நிற்கிறவர்கள் மீது திட்டு திட்டாக அசைந்தது." பொன்னீலன், மறுபக்கம், ப.135) என்றும்** பொன்னீலன் தனது மறுபக்கம் புதினத்தில் விளக்கியுள்ளார்.

மேற்கண்ட சான்றுகளின் வழி, நெய்தல் நில மக்களின் அன்றாட வாழ்க்கையோடும் வழிபாட்டோடும் புன்னை மரம் எவ்வாறு இரண்டறக் கலந்திருந்தது என்பதை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்கள் காட்டும் 'புன்னை நறுநெய்' பற்றிய பதிவுகள், நவீன இலக்கியமான பொன்னீலனின் 'மறுபக்கம்' புதினம் வரை தொடர்வதை இதன் மூலம் காண முடிகின்றது. குமரி மாவட்ட மக்களின் வட்டார வழக்குகளான 'பரல்கள்', 'வெளிச்செண்ணெய்' போன்ற சொற்கள், புன்னை மரத்தின் பயன்பாட்டையும், அதன் மருத்துவக் குணங்களையும் பறைசாற்றும் வரலாற்று ஆவணங்களாக இப்படைப்புகளில் நெய்தல் நிலப் பண்பாட்டோடு பதிவு செய்யப்பட்டுள்ளன.

**முந்திரி**

குமரி மாவட்டத்தின் தாவர அடையாளங்களுள் முந்திரி மரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதன் பழத்திற்கு வெளியில் விதை (அண்டி) அமைந்திருப்பதால், தாவரவியலில் இதனைப் 'பொய்க்கனி' (False Fruit) என்று அழைப்பர். குமரி மாவட்ட வட்டார வழக்கில் இம்மரம்

'கொல்லா மரம்' என்றும், இதன் விதை 'அண்டி' என்றும் அழைக்கப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் முந்திரி பற்றிய பதிவுகள் பரவலாகக் காணப்படுகின்றன.

**“குறுங்கால் முந்திரிப் பூவின் அன்ன” (ஐங்குறுநூறு, பா.எ.62)** என்று நற்றிணையும், முந்திரிப் பூவின் வடிவம் குறித்துப் பதிவு செய்துள்ளன.

வேனில் காலத்தில் (கோடைகாலத்தில்) விளையும் ஊட்டச்சத்து மிகுந்த, துவர்ப்புச் சுவையுடைய முந்திரிப் பழங்களை (கொல்லாம்பழம்) இம்மரங்கள் தருகின்றன. இப்பழங்கள் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களில் கண்ணைக் கவரும் வகையில் காணப்படும். கோடையில் ஏற்படும் உடல் சூட்டைத் தணித்துக் குளிர்ச்சியைத் தரும் இயல்புடையது இப்பழம். மக்கள் இப்பழத்தை விடவும், அதன் அடியில் தொங்கும் விதைக்குள் (முந்திரிப்பருப்பு) இருக்கும் பருப்பையே அதிகம் விரும்புகின்றனர்.

குமரி மாவட்ட மக்கள் இவ்விதையைக் காய்ந்த சருகுகள் கொண்டு சுட்டு, பின் கருகிய மேலோட்டைப் பிரித்தெடுத்து உள்ளிருக்கும் பருப்பை உண்ணும் வழக்கம் உடையவர்கள். விருந்தினருக்கு வழங்கும் சிற்றுண்டியாக முந்திரிக்கொட்டைகள் வறுக்கப்பட்டதை எழுத்தாளர் பொன்னீலன், **“விடிலியின் பின்னே போதகருக்காக வறுபடும் முந்திரிக்கொட்டையின் இனிய வாசனை கம்மென எழும்பியது”** (பொன்னீலன், மறுபக்கம், ப.137) என்று தன் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

குமரி மாவட்டத்தில் முந்திரிக்கொட்டைகளில் இருந்து பருப்பைப் பிரித்தெடுக்கும் தொழில், அப்பகுதி மக்களுக்கு, ஒரு முதன்மையான வாழ்வாதாரத் தொழிலாக விளங்கி வருகிறது.

இவற்றைத் தொகுத்து நோக்குகையில், முந்திரி மரம் என்பது வெறும் நுகர்வுப் பொருள் மட்டுமல்லாமல், சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழர்களின் வாழ்வியலோடும், கணித அளவைகளோடும் பிணைந்துள்ள ஒரு தாவரமாகும். குமரி மாவட்டத்தின் புவியியல் சூழலுக்கு உகந்த வாழ்வாதாரப் பயிராக விளங்கும் இம்முந்திரி, அந்நிலப்பகுதியின் நெய்தல் மற்றும் அதனைச் சார்ந்த மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும், அவர்களின் பண்பாட்டு அடையாளத்தைத் தக்கவைப்பதிலும் மிக முக்கியப் பங்காற்றுகிறது என்பதை அறிய முடிகிறது.

**தாழை**

தாழை என்பது புதர் வகையைச் சார்ந்த நெய்தல் நிலத் தாவரமாகும். இது கடற்கரைப் பகுதிகளில் இயற்கையான வேலி போலப் புதர் மண்டி வளரக்கூடியது. இதன் மலர் மிகுந்த நறுமணம் உடையது. இதனை, **‘தாழை வேலி உப்பங்கழி’** (சிலப்பதிகாரம், கானல் வரி, பா.அ.34-35) என்று சிலப்பதிகாரமும் பதிவு செய்துள்ளன.

நவீன இலக்கியத்திலும் இதன் வரவு சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. எழுத்தாளர் பொன்னீலன் தனது ‘தேடல்’ புதினத்தில், **“தாழம்பூவின் கம்மென்ற மணம் காற்று கொள்ளையிட்டுக் கொண்டு**

**வந்தது. கீழே வாய்க்காலின் அருகே தனியாக நின்ற நெடிய தாழையின் தலையில், பச்சை மடல்களுக்கு இடையே பட்டுக் குஞ்சம் போலப் பொன்னிறத்தில் ஒரு தாழம்பூ**"(பொன்னீலன், தேடல், ப.79) என்று அதன் நறுமணத்தையும், அழகிய தோற்றத்தையும் மிக நேர்த்தியாக வருணித்துள்ளார்.

சங்க இலக்கியங்கள் தொட்டு இன்றைய தற்காலப் புதினங்கள் வரை 'தாழை' என்பது நெய்தல் நிலத்தின் அடையாளமாகவும், அழகியல் மற்றும் நறுமணத்தின் குறியீடாகவும் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருவதை இதன் மூலம் அறிய முடிகிறது.

**அடும்புக்கொடி**

அடும்புக்கொடி என்பது நெய்தல் நிலத்தின் கடற்கரை ஓரங்களில் படர்ந்து வளரும் ஒரு கொடி வகையாகும். சங்க இலக்கியங்கள் இதனை 'அடும்புக்கொடி' என்றும் 'அடுப்பங்கொடி' என்றும் பதிவு செய்துள்ளன. **"குன்றோங்கு வெண்மணல் கொடியடும்பு கொய்தும்"** (நற்றிணை, பா.எ.254) என்று நற்றிணைப் பாடல் இக்கொடியைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்கள் மட்டுமன்றி, பக்தி இலக்கியத்திலும் இதற்குச் சான்றுகள் உள்ளன. **"அடும்பும் கொன்றையும் வன்னியும் மத்தமும் துடும்பல் மெய்சடைத் தூமணிச் சடையான்"** (திருஞானசம்பந்தர் தேவாரம், திருஏடகம், பதி.3.32) என்று திருஞானசம்பந்தர் தனது தேவாரப் பாடலில், சிவபெருமான் திருச்சடையில் சூடும் மலர்களுள் ஒன்றாக அடும்பின் மலரைக் குறிப்பிட்டுள்ளார்.

சங்ககாலம் தொட்டே அறியப்பட்ட இத்தகைய அடும்புக்கொடியைப் பொன்னீலன் தனது 'தேடல்' புதினத்தில் 'கடும்புக்கொடி' என்ற பெயரில் பதிவு செய்துள்ளார். கடற்கரை மணல்வெளியில் அடும்புக்கொடிகள் வலை போல் பின்னிக் கிடக்கும் சூழலில், மீன்பிடித்துத் திரும்பிய மீனவர்கள் தங்களின் இரவு உணவை உண்டு மகிழ்ந்த நிகழ்வைப் பொன்னீலன் விவரிக்கின்றார். **"மணல்மேட்டில் கடும்புக் கொடியின் வலைப்பின்னல் மீது ரூபனும் தாசனும் வால்டரும் உட்கார்ந்திருந்தார்கள்"** (பொன்னீலன், தேடல், ப.63) என்ற நாவலின் வரிகள் இக்காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இவ்வாறு, குமரி மாவட்டத்தின் நெய்தல் நிலப் பகுதிகளில் வாழும் கடல்சார் மக்களின் வாழ்வியலையும், அவர்களைச் சுற்றி அமைந்திருக்கும் தனித்துவமான கடற்கரை இயற்கைச் சூழலையும் பொன்னீலனின் படைப்புகள் மிகத் துல்லியமாகவும் யதார்த்தமாகவும் காட்சிப்படுத்தியுள்ளன என்பதை இதன் மூலம் அறியலாம்.

**தொகுப்புரை**

- இயற்கையை வெறும் நுகர்வுப் பொருளாகப் பார்க்காமல், தன் வாழ்வின் ஆன்மாவாகக் கருதிய பழந்தமிழரின் திணைக் கோட்பாடு என்பது காலத்தைக் கடந்த ஒரு வாழ்வியல் நெறியாகும்.

- எழுத்தாளர் பொன்னீலனின் படைப்புகள், வெறும் கதைகளைச் சொல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்தின் தனித்துவமான ஐந்திணைச் சூழலியலையும், அங்கு வாழும் எளிய மக்களின் வாழ்வியல் எதார்த்தங்களையும் நமக்குக் காட்டும் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன.
- மனிதனின் வாழ்வியல், மொழி, பண்பாடு ஆகிய அனைத்தும் அவன் வாழும் நிலப்பரப்போடும் புவியியல் சூழலோடும் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை இக்கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.
- தொல்காப்பியமும் பிங்கலந்தையும் காட்டும் பழங்காலக் கடல்சார் மரபானது, காலமாற்றத்திற்குப் பின்பும் பொன்னீலன் போன்ற படைப்பாளர்களின் புதினங்கள் வழியே இன்றும் தன் தனித்துவம் மாறாமல் ஆவணப்படுத்தப்பட்டுத் திகழ்கிறது.
- பொன்னீலனின் படைப்புகள் குமரி மாவட்ட நெய்தல் நிலத்தின் தாவரக் கூறுகளை வெறும் இயற்கை வர்ணனைகளாக மட்டும் சுருக்கிவிடாமல், அந்நில மக்களின் பண்பாட்டு மற்றும் வாழ்வாதார அடையாளங்களாகவே பதிவு செய்துள்ளன.
- 'பரல்கள்', 'வெளிச்செண்ணெய்', 'கொல்லா மரம்', 'அண்டி உடைப்பு', 'கடும்புக்கொடி' போன்ற குமரி மாவட்டத்திற்கே உரிய தனித்துவமான வட்டார வழக்குச் சொற்கள், நெய்தல் நில மக்களின் அன்றாட வாழ்க்கை, மருத்துவம், தொழில் மற்றும் வழிபாட்டு முறைகளோடு இத்தாவரங்கள் கொண்டுள்ள ஆழமான பிணைப்பை வெளிப்படுத்துகின்றன.
- குமரி மாவட்ட நெய்தல் நிலத் தாவரங்கள் என்பவை வெறும் தாவரவியல் பொருள்கள் அல்ல. அவை தமிழர்தம் தொன்மத்தையும், கடல்சார் மக்களின் வாழ்வியல் எதார்த்தங்களையும், அவர்களின் தனித்துவமான பண்பாட்டு எச்சங்களையும் தலைமுறை கடந்து தாங்கி நிற்கும் அழியாத வரலாற்று ஆவணங்கள் என்பது மிகத் தெளிவாகப் புலனாகிறது.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).